தமிழ்வழி

'கற்றலுக்கான ஒளி'

தரம் 08

தமிழ் மொழியும் இலக்கியமும்

இரண்டாம் தவணை

பாட அலகுகளை உள்ளடக்கியதான

சுய கற்றல் கையேடு



ஆசிரியர்:

ஏ.கஜன் B.A Tamil

077 2400 707

076 8044 959

www.tkedu.lk

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- கணிதம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- பேச்சு சிங்களம்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

அலகு 08 பசிப்பிணி மருந்து

பயிற்சி வினாக்கள்

1. பசி தீர்க்கும் வழி கூறும் காப்பியம் எது? அதனை இயற்றியவர் யார்?
2. பசியைப் 'பிணி' என்று திட்டவட்டமாய் உரைத்தவர் யார்?
3. பசிப்பிணியின் கொடுமைகள் பற்றி தீவதிலகை குறிப்பிடுவன யாவை?
4. கோமுகியிலிருந்து மணிமேகலை கைக்கு கிடைத்தது என்ன?
5. அமுதசுரபியின் சிறப்பியல்பு யாது?
6. தீவதிலகையின் வேட்கை யாதாகவிருந்தது?
7. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனக் கூறும் நூல் எது?
8. மக்கள், தேவர் ஆகிய இருசாராருக்கும் பொதுவான அறமாக அறவண அடிகள் கூறுவது என்ன?
9. மதுரை நகரிலுள்ள மாசற்ற மனைகளில் பிச்சை எடுத்தவன் யார்?
10. ஆபுத்திரனின் ஈதல் அறம் பற்றிக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுவது என்ன?
11. ஆபுத்திரனின் முன் தோன்றியவர் யார்?
12. சிந்தாதேவி, ஆபுத்திரனுக்கு உரைத்தவை யாவை?
13. அமுதசுரபியில் உணவு சுரப்பதற்காக யாரிடம் பிச்சை எடுக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது?
14. அமுதசுரபியில் முதன் முதலாக பிச்சை இட்டவள் யார்?
15. 'யானைத்தீ' என்னும் கொடும் பசியினால் துன்புற்றவர் யார்?
16. காயசண்டிகையின் பசி நோய் எவ்வாறு தீர்ந்தது?
17. உதயகுமாரனுக்குப் பயந்து காயசண்டிகை உருவில் இருந்தவர் யார்?
18. அரசருக்குரிய முக்கிய கடமையாக மணிமேகலை குறிப்பிடுவது என்ன?
19. இந்தியாவிலுள்ள பதினெட்டு மொழி பேசும் மக்களும் வந்து கூடிய இடம் எது?
20. மணிமேகலைக்கு வழங்கப்பெற்ற பட்டம் யாது?

www.lkedu.lk தமிழ்வழி தமிழ்வழி

ஆசிரியர்: ஏ.கஜன் B.A Tamil
077 2400 707 / 076 8044 959

இலக்கணம்

வினைச் சொற்கள் II

முற்றுவினை / வினைமுற்று

பால் காட்டும் முற்று விகுதிகளை ஏற்று, முற்றுப்பெறும் வினைகள் **'முற்று வினைகள்'** எனப்படும்.

எடுத்துக்காட்டு: தம்பி பாட்டுப் பாடினான். (ஆன்)
அம்மா உணவு சமைத்தாள். (ஆள்)

எச்சவினை

பால் காட்டும் முற்று விகுதிகளை ஏற்காமல், முற்றுப்பெறாது எச்சமாகக் காணப்படும் வினைகள் **'எச்ச வினைகள்'** எனப்படும்.

அமைப்பின் அடிப்படையில் எச்சவினைகளைப் பின்வருமாறு இரண்டாக வகைப்படுத்தி நோக்கலாம்.

- **பெயரெச்சம்**
  பெயர்ச் சொல்லை முடிக்கும் சொல்லாய்க் கொண்ட எச்சவினை **'பெயரெச்சம்'** எனப்படும்.
  எடுத்துக்காட்டு: செய்யும் வேலை
  வந்த மாடு
- **வினையெச்சம்**
  வினைச் சொல்லை முடிக்கும் சொல்லாய்க் கொண்ட எச்சவினை **'வினையெச்சம்'** எனப்படும்.
  எடுத்துக்காட்டு: வந்து இருந்தான்
  படிக்க வேண்டும்

பயிற்சி

- **பின்வரும் வாக்கியங்களிலுள்ள எச்சவினைகளின் வகைகளைச் சரியாக இனங்கண்டு எழுதுக.**

1. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
2. அதிக பயிற்சி செய்ய வேண்டும்.
3. எனக்குக் கடித்த நாய் இதுதான்.
4. நீ எனது வீட்டிற்கு வர வேண்டும்.
5. தமிழ்ப் பாடம் படித்து முடித்தேன்.

www.lkedu.lk

அலகு 09 ஆக்கிமீடிசு

பயிற்சி வினாக்கள்

1. இந்தப் பாடப்பகுதியை எழுதியவர் யார்? இது எத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்?
2. கியூஸ் நாட்டு அரசன் யார்?
3. பொன் நகைகள் செய்யும் தொழிலில் ஈடுபடுபவர்கள் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுவர்?
4. மன்னன் எதனைச் செய்துதருமாறு கொல்லனிடம் பொன் கொடுத்தான்?
5. மன்னனுக்கு ஏற்பட்ட சந்தேகம் யாது?
6. மன்னன், தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள யாரின் உதவியை நாடினான்?
7. தனது கட்டளையை நிறைவேற்றாவிடில் யாது நிகழுமென மன்னன் ஆக்கிமிடிசுக்கு உரைத்தான்?
8. ஆக்கிமிடிஸ் கண்டறிந்த விஞ்ஞானத் தத்துவம் என்ன?
9. கொல்லன் செய்த முடியில் கலப்பு இருப்பதை ஆக்கிமிடிஸ் எவ்வாறு கண்டறிந்து கொண்டான்?
10. இப் பாடப்பகுதி எமக்குக் கற்றுத்தரும் படிப்பினை யாது?

இலக்கணம்

வினைச்சொற்கள் III

● ஏவல் வினை

முன்னிலையில் உள்ள ஒருவரை யாதாயினும் ஒரு செயலை நிகழ்த்துமாறு அல்லது நிகழ்த்தாதிருக்குமாறு பணிக்கும் / கட்டளையிடும் வகையில் அமையும் வினைகள் **'ஏவல் வினைகள்'** எனப்படும்.

எடுத்துக்காட்டு: அங்கே போகாதீர்கள்.
அதிலே இரு.

அமைப்பின் அடிப்படையில் ஏவல் வினைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- **ஏவல் ஒருமை**

எடுத்துக்காட்டு: அதனைச் செய்.
இங்கே வா.

www.lkedu.lk தமிழ்வழி தமிழ்மொழி

✹ **ஏவல் பன்மை**

எடுத்துக்காட்டு: அவற்றைத் தொடாதீர்கள்.
இவற்றை உண்ணுங்கள்.

● வியங்கோள் வினை

வியங்கோள் வினைக்குரிய விகுதிகளை ஏற்று வருகின்ற வினை **'வியங்கோள் வினை'** எனப்படும். வியங்கோள் வினையானது பின்வரும் விகுதிகளை ஏற்று வருவதுண்டு.

- ❖ க - வாழ்க
- ❖ இய - வாழிய
- ❖ இயர் - வாழியர்
- ❖ அட்டும் - வாழட்டும்

வியங்கோள் வினையானது பின்வரும் பொருள்களைப் பெற்று வருவதுண்டு.

- ❖ வாழ்த்தல் - வாழ்க, வாழிய
- ❖ வைதல் - ஒழிக, கெடுக
- ❖ விதித்தல் - ஒப்படைக்குக, எழுதுக
- ❖ வேண்டல் - அருள்க, புரிக

பயிற்சி

✹ **பின்வரும் வாக்கியங்களிலுள்ள வியங்கோள் வினைகள் ஏற்று வந்துள்ள பொருளைச் சரியாக இனங்கண்டு எழுதுக.**

1. நாட்டில் சமாதானம் நிலவட்டும்.
2. உங்களால் இயலுமான உதவியைச் செய்க.
3. உன் ஆட்சி ஒழியட்டும்.
4. உன் வாழ்வில் இன்பம் மலர்க.
5. இறைவா! அருள் புரிக.

திரிசொல் I

இயல்பாகப் பொருள் உணர்த்தாது, அரிதாகப் பொருள் உணர்த்துவனவாக அமையும் சொல் **'திரிசொல்'** எனப்படும்.

ஒரு பொருள் தரும் பல சொற்களும், பல பொருள் தரும் ஒரு சொல் என்பனவும் திரிசொற்களாகவே கொள்ளப்படுகின்றன.

● ஒரு பொருள் குறித்த பல சொல்

எடுத்துக்காட்டு: மலை - வெற்பு, விலங்கல், வரை, குன்று, கிரி
கடல் - ஆழி, சக்கரம், சாகரம், மோதிரம்

www.lkedu.lk தமிழ்வழி தமிழ்வழி

அலகு 10 நாடகமே உலகம்

பயிற்சி வினாக்கள்

1. இக்கட்டுரையின் ஆசிரியர் யார்? இது எத்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்?
2. சேக்ஸ்பியர் முதலிய அறிஞர்கள் யாது கூறியிருப்பதாக கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்?
3. மக்களின் அறிவை அபிவிருத்தி செய்ய உதவும் கருவி எதுவென கூறப்பட்டுள்ளது?
4. இராம நாடகத்தில் காட்டப்படும் விடயம் யாது?
5. "நாடகம் பாமர மக்களின் பல்கலைக்கழகம்" என்ற கூற்றுடன் தொடர்புடையவர் யார்? இவ்வாறு கூறப்படுவதற்கான காரணம் யாது?
6. கட்டுரையில், நடிப்பின் முக்கியத்துவம் ஆசிரியரால் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?
7. ஒவ்வொரு பாடசாலை, உயர்கல்வி நிறுவனத்திலும் இருக்கவேண்டியது எதுவென கட்டுரையில் கூறப்பட்டுள்ளது?
8. நாடகம் மூலம் எத்தகையவற்றைக் கற்பிப்பது சிறந்த முறையென ஆசிரியர் கூறுகின்றார்?
9. இக்கட்டுரையின் இறுதியில் கையாளப்பட்டுள்ள செய்யுளில் நாடகசாலை பற்றி குறிப்பிடப்படுவது என்ன?
10. "உலகில் வாழும் மனிதர்கள் எல்லோரும் நடிகர்கள்" எனக் குறிப்பிடும் கட்டுரையாசிரியர், அதற்காக எடுத்துக்காட்டும் உதாரணங்களைச் சுருக்கமாகத் தருக.

இலக்கணம்

சொற்றொடரும் வாக்கியமும்

சொற்றொடர்

அமைப்பு ரீதியான உறவுடைய ஒரு சொல் அல்லது சொற்களின் தொகுதி **'சொற்றொடர்'** எனப்படும். சொற்றொடரானது வாக்கியமொன்றின் உறுப்பாக அமைந்து காணப்படும்.

அமைப்பின் அடிப்படையில் சொற்றொடரைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

தமிழ் தமிழ் தமிழ் www.lkedu.lk

✹ **பெயர்த் தொடர்**

பெயர்ச்சொல் ஒன்றைத் தலைமை உறுப்பாகக் கொண்டமைந்த தொடர் **'பெயர்த் தொடர்'** எனப்படும்.

எடுத்துக்காட்டு: யானை
கரிய யானை

✹ **வினைத் தொடர்**

வினைச்சொல் ஒன்றைத் தலைமை உறுப்பாகக் கொண்டமைந்த தொடர் **'வினைத் தொடர்'** எனப்படும்.

எடுத்துக்காட்டு: பாடினாள்
இனிமையாகப் பாடினாள்

● வாக்கியம்

சொற்கள் பொருள் தரக்கூடிய வகையில் குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கேற்ப அமைப்பு ரீதியாக ஒன்றுடனொன்று இணைந்து முற்றுப் பொருளைத் தருமாயின் அது **'வாக்கியம்'** எனப்படும்.

எடுத்துக்காட்டு: சூரியன் மேற்கு வானில் மறைந்தது.
பாடசாலைகள் நாளைமுதல் ஆரம்பமாகின்றன.

வாக்கியங்களை அதன் அமைப்பின் அடிப்படையில் பல்வேறாக வகைப்படுத்தி நோக்கலாம்.

எடுத்துக்காட்டு: தனி வாக்கியம், கூட்டு வாக்கியம், கலப்பு வாக்கியம்

பயிற்சி

✹ **பின்வரும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள அட்டவணையைப் பூர்த்திசெய்க.**

1. அழகான மான், குட்டியுடன் ஓடியது.
2. ஆலயம் மின்னொளியில் பள பளவென மின்னியது.
3. என்றும் அழியாத தர்மம் இறுதியில் வெல்லக் காண்போம்.
4. தமிழின் சிறப்பை உலகமே போற்றும்.
5. தொற்றுநோயின் பரவல் தீவிரமடைந்துள்ளது.

இல	பெயர்த்தொடர்	வினைத்தொடர்
1		
2		
3		
4		
5		

தமிழ் தமிழ் தமிழ்வழி www.lkedu.lk

✹ **பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.**

1. மானைப் / சென்று / இராமன் / பிடித்தான் / காட்டுக்குச்
2. நடைமுறைகளைப் / கொள்ளலாம் / சுகாதார / தொற்றுநோயின் / பின்பற்றிக் / ஆபத்திலிருந்து / கொள்வதன் மூலம் / விடுபட்டுக்
3. வீசியது / பலமாக / காற்று
4. அடுத்த / பாடசாலைகள் / ஆரம்பமாகவுள்ளன / வாரத்திலிருந்து / மீள
5. முயன்று / சித்தியடையலாம் / கற்றால்

அழைப்பிதழ்

வீட்டில் அல்லது நிறுவனங்களில் நடைபெறுகின்ற விழாக்கள் அல்லது நிகழ்வுகளுக்கு நண்பர்கள். உறவினர்கள், ஆர்வலர்கள் மற்றும் விருந்தினர்களை அழைக்கும் விதமாக எழுதப்படுவன **'அழைப்பிதழ்'** எனப்படும்.

● அழைப்பிதழின் வகைகள்

✹ **குடும்பம்சார் அழைப்பிதழ்**
எடுத்துக்காட்டு: திருமண அழைப்பிதழ்
பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்

✹ **நிறுவனம்சார் அழைப்பிதழ்**
எடுத்துக்காட்டு: கலைவிழா அழைப்பிதழ்
கட்டிடத் திறப்பு விழா அழைப்பிதழ்

● அழைப்பிதழ் ஒன்றின் அமைப்பொழுங்கு

- தலைப்பு
- விளிப்பு
- நிகழ்வு நடைபெறும் இடம்
- காலம் (திகதி, நேரம்)
- விடயம்
- அழைப்பவர் / அழைக்கும் நிறுவனம்
- அழைப்பு அனுப்பப்படும் திகதி

www.lkedu.lk தமிழ்வழி

அலகு 11 சொல்லின் இசை

பயிற்சி வினாக்கள்

1. இப் பாடப் பகுதியை எழுதியவர் யார்?
2. மனிதனுக்கு இயற்கையாகவே பாடத்தெரியும் என்பதை எவ்வாறு உணரலாம்?
3. மனிதனுடைய செவி எதனைக் கேட்க விரும்புகின்றது?
4. இசையில் பயிற்சி இல்லாதவர்களும் ஒழுங்கான ஒலிகளாலான சொற்களை ஏன் கேட்க விரும்புகின்றார்கள்?
5. இப் பாடப்பகுதியில் முன்வைக்கப்பட்டுள்ள பழமொழிகள் எவை?
6. பழமொழிகளை எம்மால் மறக்க முடியாமைக்கான காரணம் எதுவெனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்?
7. தெலுங்கு மொழிக்கு "தெலுங்கு" எனப் பெயர் வந்தமைக்கான காரணமாகக் கட்டுரையாசிரியர் யாது கூறுகின்றார்?
8. இப் பாடப்பகுதியில் இசையின் முக்கியத்துவம் எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?

இலக்கணம்

வாக்கியத்தின் அமைப்பு

வாக்கியமொன்றில் பிரதானமாக எழுவாய், பயனிலை மற்றும் செயப்படுபொருள் என்பன இடம்பெற்றிருக்கும். மேலும், இவற்றுக்குரிய அடைமொழிகளையும் சில வாக்கியங்களில் அவதானிக்க இயலும்.

பயிற்சி

✹ **பின்வரும் வாக்கியங்களிலுள்ள வாக்கிய உறுப்புகளைச் சரியாக இனங்கண்டு எழுதுக.**

1. நல்ல மனிதன் நாட்டின் உரிமைக்காக அயராது உழைத்தான்.
2. எனது அம்மா சுவையான உணவுகளை விரைவாகச் சமைப்பார்.
3. அழகான முயல் குட்டி காட்டில் குட்டியுடன் ஓடியது.
4. அழகிய நடனத்தை நிகழ்த்திய மாணவியை சபையோர் வெகுவாகப் பாராட்டினர்.
5. சின்னக் குழந்தை தனது பிஞ்சுக் கரங்களால் என்னைப் பற்றியது.

தமிழ் மொழி www.lkedu.lk



Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

திரிசொல் II

இயல்பாகப் பொருள் உணர்த்தாது, அரிதாகப் பொருள் உணர்த்துவனவாக அமையும் சொல் **'திரிசொல்'** எனப்படும்.

ஒரு பொருள் தரும் பல சொற்களும், பல பொருள் தரும் ஒரு சொல் என்பனவும் திரிசொற்களாகவே கொள்ளப்படுகின்றன.

பல பொருள் குறித்த ஒரு சொல்

எடுத்துக்காட்டு: பதி - இடம், அரசன், கணவன், ஒளி
கவி - குரங்கு, பாட்டு, கவிஞன், ஆசு

தமிழ்வழி தமிழ்வழி தமிழ்வழி
www.lkedu.lk

அலகு 12 சுதந்திர கீதம்

பயிற்சி வினாக்கள்

1. இப் பாடப்பகுதி எந்த நாட்டினது சுதந்திர கீதமாக அமைகின்றது?
2. இப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சுதந்திர வீரர்கள் யாவர்?
3. இலங்கையை ஆட்சி செய்த அந்நிய நாட்டவர்கள் யாவர்?
4. யாருடைய ஆட்சியில் இலங்கைக்குச் சுதந்திரம் கிட்டியதாகக் கூறப்பட்டுள்ளது?
5. இப் பாடலில் அடையாளப்படுத்தப்படும் இலங்கையின் பிரதான இனத்தவர்கள் யாவர்?
6. இப் பாடலில் கூறப்படும் விழுமியக் கருத்துக்கள் யாவை?
7. இப் பாடலில் இடம்பெற்றுள்ள உவமை, உருவக அணிகளை இனங்காண்க?
8. இலங்கை நாட்டின் வளங்களாகக் கவிஞர் குறிப்பிடுவன யாவை?

இலக்கணம்

வாக்கிய இயைபு

ஒரு வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடம் என்பவற்றால் ஒன்றிற்கு ஒன்று இயைபுபட்டு அமைதல் **'வாக்கிய இயைபு'** எனப்படும். இவ்வாறு இயைபுபட்ட அமையும் வாக்கியங்களையே வழுவற்ற வாக்கியங்கள் என்கின்றோம்.
எடுத்துக்காட்டு: சூரியன் கிழக்கில் உதிக்கும்.

www.lkedu.lk

அலகு 13 பாலித்திட வேண்டுமம்மா

பயிற்சி வினாக்கள்

1. இப் பாடப்பகுதியை எழுதியவர் யார்? இது எத்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்?
2. யாருடைய வற்புறுத்தலின் பின் சேந்தன் படுக்கையை விட்டெழுந்தான்?
3. சேந்தனிடத்தே எதனை வளர்ப்பதில் சாம்பவி கரிசனை எடுத்துக்கொண்டாள்?
4. சேந்தன் மனம் சோர்வுற்று இருந்தமைக்கான காரணம் என்ன?
5. மனம் சோர்வுற்றிருந்த சேந்தனது நடத்தைகள் கதையூடே எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளன?
6. சேந்தனது நடத்தைகள் எல்லாம் எதன் குணங்குறிகளை வெளிப்படுத்துவதாய் அமைந்தன?
7. சேந்தன் மனம் சோர்வுற்று இருந்தமைக்கான காரணம் என்ன?
8. சேந்தனின் கவலையைப் போக்க, சாம்பவி கூறிய பரிகாரம் என்ன?
9. சேந்தனின் நண்பன் யார்? அவனுக்கு நேர்ந்த அவலம் யாது?
10. சேந்தன், மயூரன் ஆகியோருக்கிடையிலான நட்புப் பற்றி உமது மனப்பதிவு யாது?
11. இச்சிறுகதை வாயிலாக வெளிப்படும் விழுமியக் கருத்துக்கள் யாவை?
12. "சாம்பவி ஒரு சிறந்த உளவள ஆலோசகர்" இக் கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? காரணம் தருக?

இலக்கணம்

இணைப்பிடைச் சொல்

இரண்டு அல்லது பல சமநிலைத் தொடர்களை இணைக்கப் பயன்படும் சொற்கள் **'இணைப்பிடைச் சொற்கள்'** எனப்படும்.

உம், அல்லது, ஆனால், எனவே ஆகவே எனப் பல்வேறு வகையான இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வருகின்றோம்.

பயிற்சி

✹ **பின்வரும் இணைப்பிடைச் சொற்களைக் கொண்டு தலா ஒவ்வொரு வாக்கியம் அமைக்குக.**

உம்	எனவே	ஆகவே
ஆகையினால்	இருப்பினும்	ஆனால்

தமிழ்வழி தமிழ்வழி www.lkedu.lk

அலகு 14 உயிர் இரக்கம்

பயிற்சி வினாக்கள்

1. இப் பாடப்பகுதியை எழுதியவர் யார்?
2. உலகின் அடையாளம் எதுவெனக் கட்டுரையாசிரியர் கூறுகின்றார்?
3. எவற்றின் சமநிலை காரணமாக உயிர்கள் தோன்றுவதாகக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்?
4. எமது முன்னோர்கள் இயற்கையைப் போற்றி வாழ்ந்தமைக்கான காரணம் என்ன?
5. "ஒன்றறி வதுவே உற்றறி வதுவே" என உரைப்பவர் யார்?
6. சங்க இலக்கியத்தினூடாக உயிர் அருமை எவ்விதம் போற்றப்படுகின்றது?
7. "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" எனப் பாடிய புலவர் யார்?
8. மனுநீதிச்சோழனின் மகன் செய்த செயல் யாது?
9. அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த மணி எப் பெயரால் அழைக்கப்பட்டது?
10. தனது கன்றை இழந்த தாய்ப்பசு யாது செய்தது?
11. பசுக்கன்றைக் கொன்ற மகனுக்கு மன்னன் வழங்கிய தண்டணை யாது?
12. தவறு இழைத்த மகனுக்கு முறையான தண்டனையைப் பெற்றுக்கொடுத்தமையால் சோழ மன்னன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
13. மன்னன் சிபியின் மடியில் வந்து வீழ்ந்த பறவை எது?
14. மன்னன் சிபியிடம் வேடன் வேண்டிநின்றது என்ன?
15. வேடனின் வேண்டுகோளை மறுத்து மன்னன் கூறியது என்ன?
16. பேக மன்னன் எக்குடியில் பிறந்தவனாவான்?
17. குளிரால் வாடிய மயிலுக்கு போர்வையளித்த மன்னன் யார்?
18. பறம்பு மலையை ஆட்சி செய்த குறுநில மன்னன் யார்?
19. பாரியின் உயிர்நேயம் எவ்விதம் வெளிப்படுத்தப்படுகின்றது?
20. மணியின் நாவை அசையாது இழுத்துக் கட்டும்படி தேர்ப்பாகனை தலைவன் பணிக்கக் காரணம் யாது?
21. பின்வரும் கடவுளருக்கான வாகனமாக அமையும் உயிர்களைக் குறிப்பிடுக?

தேவேந்திரன்	காளி	மீனாட்சி
சிவன்	ஐயனார்	வைரவர்
திருமால்	பிள்ளையார்	சனி
முருகன்	ஐயப்பன்	எமன்

www.kedu.lk

இலக்கணம்

அடைமொழி

பெயர் அல்லது வினைச் சொற்களின் பண்பை விசேடித்தோ அல்லது மேலும் விளக்கம் தரும் வகையிலோ அமையும் சொற்கள் **'அடைமொழி'** எனப்படும்.

அமைப்பின் அடிப்படையில் அடைமொழியைப் பின்வருமாறு இரண்டாக வகைப்படுத்தி நோக்கலாம்.

- **பெயரடை**
  பெயர்ச் சொல் ஒன்றின் பண்பை விசேடித்தோ அல்லது மேலும் விளக்கம் தரும் வகையிலோ அமையும் சொற்கள் **'பெயரடை'** எனப்படும்.
  எடுத்துக்காட்டு: அழகிய சேலை
  பெரிய நூலகம்

- **வினையடை**
  வினைச் சொல் ஒன்றின் பண்பை விசேடித்தோ அல்லது மேலும் விளக்கம் தரும் வகையிலோ அமையும் சொற்கள் **'வினையடை'** எனப்படும்.
  எடுத்துக்காட்டு: இனிமையாகப் பாடினாள்.
  வேகமாக ஓடினான்.

பயிற்சி

- **பின்வரும் வாக்கியங்களிலுள்ள அடைமொழிகளை இனங்கண்டு, அவை பெயரடைமொழிகளா அல்லது வினையடைமொழிகளா என்பதை எழுதுக.**
  1. செந்நிறப் பூக்கள் மணம் வீசின.
  2. வேகமாக வந்த கார் அவனை முட்டி மோதியது.
  3. நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்.
  4. காற்று பலமாக வீசியது.
  5. குளிர்மையான நிலவு வானில் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

திசைச்சொல்

தமிழில் வழங்கிவரும் ஆரியம் (வடமொழி) அல்லாத ஏனைய மொழிச் சொற்கள் **'திசைச் சொற்கள்'** எனப்படும்.
எடுத்துக்காட்டு: தெலுங்கு மொழி - இடாப்பு, இராணுவம், இலஞ்சம்

தமிழ் தமிழ் தமிழ்
www.lkedu.lk